வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்;
ஒற்றுமையில் மகளிர் வளர்ச்சியைக் காண்போம்;
மகளிரின் வளர்ச்சியில் மனநிறைவை அடைவோம்;
மகளிரின் மனநிறைவே நமது அரசின் வெற்றி
என்பதை ஓங்கிச் சொல்வோம்;

**திரு. மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை



# வறுமையிலிருந்து வளத்தை நோக்கி...



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மதுரையில் 06,02,2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில் 72,000 சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த மகளிர் பயன்பெறும் வகையில் 181 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வு

# TNCDW

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய குடும்பங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பாடுபட்டு வருகிறது.

சுய உதவிக்குழு இயக்கத்தின் மூலமாக, இந்நிறுவனமானது அனைத்து நிலை மக்களின் பங்களிப்பையும் உறுதி செய்து அடித்தட்டு மக்களுக்கு தேவையான நிதி உதவி, வங்கி இணைப்பு, வியாபார மற்றும் வாழ்க்கைக்கான வழிகாட்டுதலை வழங்கி ஒரு நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.

**“அடிமைத் தனத்தைதகர்த்தெறியும்**
**வலிமைமிகு போர்குரல் பெண்களே”**

**-திரு. மு.க. ஸ்டாலின்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# பொருளாதார வளர்ச்சியை நோக்கி - TNCDW வின் பயணம்

**ஆரம்ப காலகட்டம்**
**1989-1996**

1989 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்டத்தின் தளி ஒன்றியத்தில் சுய உதவிக்குழு இயக்கம் துவங்கப்பட்டது. குழுக்களின் ஆக்கப்பூர்வமான பங்கேற்பின் மூலம் பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்தல் இக்காலகட்டத்தின் அம்சமாகும்.

**ஒருங்கிணைப்பு காலகட்டம்**
**1997-2005**

இக்காலகட்டத்தில் மகளிர் நலன் சார்ந்த திட்டங்கள் உருவாக்கப் -பட்டன. குழு செயல்பாட்டிற்காக கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. குழுக்களாக அமைத்து, திறன் பயிற்சி மற்றும் நிதி ஆதரவின் மூலமாக வாழ்வாதார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இதன் தொடர் முயற்சியாக குழுக்கூட்டம் நடத்துவதுவதற்கான கட்டிடங்கள் மற்றும் மாவட்டம் தோறும் வணிக வளாகங்கள் உருவாக்கப்பட்டன.

**மாற்றத்திற்கான காலகட்டம்**
**2006 -2011**

இக்காலகட்டத்தில் உலகவங்கியின் நிதி உதவியோடு புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டது. மக்கள் நிலை ஆய்வின் மூலம் இலக்கு மக்களை கண்டறிந்து, சமுதாய முதலீடு மற்றும் இலக்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய வறுமை ஒழிப்பிற்கான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.


**விரிவாக்க காலகட்டம்**
**2012 - இந்நாள் வரை**

இக்காலகட்டத்தின் நிலையான வருமானம் மற்றும் லாபகரமான தொழில் வாய்ப்புகளை உருவாக்கு -தல், பிற துறைகளுடன் இணைந்து சுய உதவி குழுக்களின் மேம்பாட்டிற் -காக செயல்படுதல்

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் வாழ்வாதார இயக்கங்கள்

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஊரகப்பகுதிகளில் வாழும் ஏழை குடும்பங்களுக்கு வாழ்வாதார திட்டங்கள் மற்றும் முறையான நிதி இணைப்பு மூலமாக குடும்ப வருமானத்தை உயர்த்துவதாகும்.




## திறன் பயிற்சி

கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளித்தல்

**ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள்**


சுய வேலை வாய்ப்பை மையப்படுத்திய குறுகிய கால திறன் பயிற்சி திட்டம்

**தீன் தயாள் உபாத்யாய கிராப்புற திறன் பயிற்சி திட்டம்**

ஊதிய வேலைவாய்ப்பை மையப்படுத்திய நீண்ட கால திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம்

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

இவ்வியக்கத்தின் நோக்கமானது நகர்ப்புர ஏழைகளின் வாழ்க்கையையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் நிதி உள்ளாக்கம் மற்றும் தொழில் முனைவு மூலம் மேம்படுத்துதல்





## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - ஓர் அறிமுகம்

இத்திட்டம் ஊரகப் பகுதிகளில் இலக்கு மக்களைக் கொண்டு வலுவான மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் நிதி சார்ந்த பிற சேவைகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் - வளமைக்கு வழிவகுத்தல்



இவ்வியக்கத்தின் கீழ் 36.29 இலட்சம் குடும்பங்களை உள்ளடக்கி, 3.18 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இக்குழுக்கள் 12,525 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கீழ் இணைக்கப்பட்டு, சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் நலிவு நிலை குறைப்பு நிதி போன்ற கூறுகளின் கீழ் மொத்தம் ரூ. 1308.69 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. நிதி உள்ளாக்கத்தின் கீழ் சுயஉதவிக்குழுக்களுக்கு தொழில் கடன் மற்றும் நுகர்வு கடனாக வங்கியின் மூலம் ரூ. 92,677 கோடி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

# ஊரக வாழ்வாதார முன்னெடுப்புகள்

## பண்ணை சார்ந்த தொழில் மேம்பாடு



- 2.84 இலட்சம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பண்ணைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டு பயனடைந்துள்ளார்கள். இதில் பல குடும்பங்கள் ஊட்டச்சத்து தோட்டம் மற்றும் சான்றளிக்கப் பட்ட விதைகள் உற்பத்தி தோட்டத்தை உருவாக்கி உள்ளனர்.
- 190 இயற்கை வேளாண் தொகுப்புகள், 171 ஒருங்கிணைந்த பண்ணைத் தொழில்கள் மற்றும் 11597 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.



## பண்ணை சாரா தொழில் மேம்பாடு

- பண்ணை சாரா சிறு தொழிலை ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும். இதுவரையில் 30570 தனி நபர் தொழில் முனைவு மற்றும் 248 தொகுப்பு தொழில் முனைவு அமைக்கப்பட்டுள்ளது.
- உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம் படுத்தும் திட்டத்தின் (PMFME) கீழ் 3020 சிறு தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில், 4344 சுய உதவிக்குழுக்கள் தங்களின் பொருட்களை விற்பனைக் கண்காட்சிகளில் சந்தைப்படுத்தியதன் வாயிலாக ரூ. 4.12 கோடிக்கு விற்பனை செய்துள்ளனர்.



# கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு

## மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் இணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 16 மாவட்டங்களில் 346 ஊராட்சிகளில், 963 அரசு தொடக்கப்பள்ளிகளில் 52,987 மாணவர்களுக்காக செயல்படுத்தப்பட்டுவருகிறது. மேலும் இத்திட்டமானது மற்ற மாவட்டங்களுக்கும் விரைவில் விரிவுப்படுத்தப்படஉள்ளது.





## பாலின சமத்துவ பிரச்சாரம்

விளிம்பு நிலையில் உள்ள நலிவுற்ற பெண்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் சந்தித்து வரும் வன்முறை மற்றும் பாகுபாடு போன்றவற்றை தடுப்பதற்கான ஓர் முயற்சி ஆகும். மாநிலம் முழுவதும் 10 பாலின வள மையம் அமைக்கப்பட்டுள்ளது.

## மக்களைத் தேடி மருத்துவம்

ஊரகப் பகுதிகளில் சுகாதார சேவைகளை வழங்க 8,713 சுய உதவிக்குழு தன்னார்வலர்கள் துணை சுகாதார மையங்களுடன் இணைக்கப்பட்டு சேவை புரிந்து வருகின்றனர். இவர்கள் தொற்றா நோய்களை கண்டறிந்து, நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளை வீடுகளுக்கே சென்று வழங்குகிறார்கள்.



## நலிவுற்றோர் தேவை கண்டறிதல் முகாம்

இவ்வியக்கமானது முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் போன்றோர்களின் தேவைகளை கண்டறிவதற்கான முகாம்களை நடத்தி பிற துறைகளுடன் இணைந்து அரசு திட்டங்களை இவர்களுக்கு சென்றடைய பாடுபடுகிறது.

## உணவுத் திருவிழா

இவ்வியக்கம் மூலம் பள்ளிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படுகிறது. உணவு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ரத்த சோகை போன்ற சத்துக் குறைபாடுகள் பற்றியும், சிறு தானிய உணவின் முக்கியத்துவம்பற்றியும் விளக்கப்படுகிறது.



## பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பு
## குழுக்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பு





### திறன் வளர்ப்பு பயிற்சி

ஊரக இளைஞர்களுக்கு உரிய திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கி அவர்களுக்கு மாத வருமானத்துடன் கூடிய வேலை வாய்ப்பு அல்லது சுய வேலை வாய்ப்பினை DDU-GKY மற்றும் RSETI திட்டத்தின் மூலம் உருவாக்குதல்.

## தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY)

18 முதல் 35 வயதிற்குட்பட்ட ஊரக ஏழை இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி, அதில் குறைந்தபட்சம் 70 சதவிகிதம் நபர்களுக்கு பணியமர்வு இதன் நோக்கமாகும். 2019 - 2023 ஆம் ஆண்டு வரை 84,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 42,279 இளைஞர்கள் பயிற்சி பெற்று, அதில் இது வரை 20,393 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.



## ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனமானது அந்தந்த மாவட்டத்தில் உள்ள முன்னோடி வங்கிகளால் உருவாக்கப்பட்டு குறுகிய கால பயிற்சிகள் வழங்கி இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. தமிழ்நாட்டில் 32 ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் இதுவரை 2,54,502 நபர்கள் பயிற்சி பெற்று அதில் 1,87,734 நபர்கள் சுய வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.



# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

TNULM
TAMIL NADU URBAN LIVEHOODS MISSION
*Empowering Lives*

இத்திட்டம், நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி, ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் அல்லது சுய வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்வதன் மூலம் அவர்களின் வறுமையையும் நலிவுநிலையையும் குறைத்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதாகும்.

நகர்ப்புர உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தி தருதல், நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், கடன் வசதி ஏற்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்பட செய்தல்.






TAMIL NADU URBAN LIVEHOODS MISSION
*Empowering Lives*

# விளிம்பு நிலையிலிருந்து வளர்ச்சியை நோக்கி நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்



1.29 இலட்சம் சுய உதவிக்குழுக்களில் உள்ள 14.16 இலட்சம் நகர்ப்புர குடும்பங்களின் வறுமையை போக்குவதற்கான வலிமையான கட்டமைப்பு

1.98 இலட்சம் குழுக்களுக்கு (MaThi and Non - MaThi) மொத்தம் ரூ. 33,462 கோடி கடனுதவி வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.





2,33,458 நகர்ப்புர சுய உதவிக்குழு உறுப்பினர் களுக்கு குறு சிறு தொழில் முனைவு நடவடிக்கைகள் மேற்கொள்ள வங்கி இணைப்பாக மொத்தம் ரூ. 1502.81 கோடி வழங்கப்பட்டுள்ளது.




# கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு நகர்ப்புர ஏழைகளின் வளமைக்கு வாய்ப்பு

## மக்களைத் தேடி மருத்துவம்

2,256 நகர்ப்புர சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சுகாதார தன்னார்வலர்களாக 159 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

இதுவரையில் 1,04,21,442 நபர்கள் இச்சேவையினை பெற்றுள்ளனர்.

## உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்துதல் திட்டம்

உணவு பதப்படுத்துதல் சிறு நிறுவனங்களை நடத்தும் 3,350 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஆதார நிதியாக ரூ. 40,000 வீதம் மொத்தம் ரூ. 12.79 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை

நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சிறப்பு முயற்சியாக 1,217 தெருவோர உணவு வியாபாரிகளுக்கு மாநில அளவில் உணவு பாதுகாப்பு மற்றும் தரம் குறித்த பயிற்சி வழங்கி FSSAI சான்றிதழ் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

## பிற துறை ஒருங்கிணைப்பு

2022-23 ம் ஆண்டில், நகர்ப்புரத்திலுள்ள 337 குழுக்களில் உள்ள 3189 குழு உறுப்பினர்கள் ரூ. 10.64 கோடி அளவில் பிற துறை ஒருங்கிணைப்பு மூலம் பயனடைந்துள்ளனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பு முயற்சிகள்

## மதி - விற்பனைக்குறியீடு மூலம் சந்தைப்படுத்துதல்

சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மதி என்ற விற்பனை குறியீட்டில் சந்தைப்படுத்துதல், இதன் மூலம் பொருட்களின் தரத்தினையும் அதன் விற்பனையையும் அதிகரித்தல்.



## மறுகுடியேற்ற குடியிருப்புகள்



சென்னை – கண்ணகி நகர், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி போன்ற மறுகுடியேற்றம் செய்யப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ளவர்களை சுயஉதவிக்குழுக்களாக அமைத்தல், திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல், வங்கிக் கடன் வழங்குதல் மற்றும் வாழ்வாதார மேம்பாடு அடைய செய்தல்.



## மின்னணு முயற்சிகள்

நகர்ப்புர சுயஉதவிக்குழுக்களின் சமூகத் தர மதிப்பீடு, வங்கி தர மதிப்பீடு மற்றும் நுண்நிதி திட்டம் வகுத்தல் போன்ற கைபேசி செயலிகள் மற்றும் வலைதள முன்னேற்ற தரவு (Dashboard) மூலம் திட்ட செயலாக்கத்தை கண்காணித்தல்.

## வாழ்வாதார அழைப்பு மையம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்காக செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில் வாழ்வாதார உதவி அழைப்பு மையம் 155330 என்ற எண்ணில் செயல்பட்டு வருகிறது.



## திறன் வளர்ப்புப் பயிற்சி

நகர்ப்புரங்களில், குறு நிறுவன மேம்பாடு, வாழ்வாதார நடவடிக்கைகள், ஏற்றுமதி செயல்பாடுகள், உணவு பாதுகாப்பு, நிறுவன மேலாண்மை, பாலின சமத்துவம், மகளிர் தன் சுத்தம், வங்கியாளர் பயிற்சி, தொழிலாளர் சட்டங்கள், நிதி சார் கல்வி, வாடிக்கையாளர் சேவை மற்றும் சந்தைப் படுத்துதல் பயிற்சி வழங்குதல்.





## முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி அளித்தல்

L&T, ராக் பெல்லர் நிறுவனம், A2B, நேச்சுரல்ஸ், HDB நிதிச் சேவை, இந்திய அஞ்சல் வங்கி, அப்பல்லோ மருத்துவமனை, நிப்பான் பெயிண்ட்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து நகர்ப்புர இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்குதல்.



## நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் சீரமைப்பு

தொழில் திறன் பயிற்சி பெற்ற நபர்களை பதிவு செய்தல், வேலை வாய்ப்பு வழங்கும் மையமாக செயல்படுதல், பொது சேவை மையம், சேவைகளை ஒருங்கிணைத்தல் (Urban Serve) மற்றும் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல்.

## பொருள் விற்பனை மற்றும் சேவைகளுக்கான மின்னணு தரவு

Urban Serve - தொழில் நுட்ப தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு தளம் ; Urban Leap - சுய உதவிக்குழுக்களின் தொழில்களுக்கு வழிகாட்டுத்தளம் ; Urban Eats - தெருவோர உணவு விற்பனையாளர்கள் குறித்த விவரங்கள் உள்ளடக்கிய இணையதளம்.

